செ.வெ.எண்.04 நாள்: 01.05.2020

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி பகுதியில் உள்ள சலவை தொழிலாளர்கள், லோடு ஆட்டோ ஓட்டுநர்கள் மற்றும் பஸ் முகவர்கள் என 77 நபர்களுக்கும், 35 இசை கலைஞர்களுக்கும் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் செ.ராஜூ அவர்கள் அரிசி மற்றும் மளிகை பொருட்களை வழங்கினார்.

---

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி பகுதியில் உள்ள சலவை தொழிலாளர்கள், லோடு ஆட்டோ ஓட்டுநர்கள் மற்றும் பஸ் முகவர்கள் என 77 நபர்களுக்கும், 35 இசை கலைஞர்களுக்கு அரிசி மற்றும் மளிகை பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சி இன்று (01.05.2020) நடைபெற்றது. நிகழ்ச்சியில் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் செ.ராஜூ அவர்கள் சலவை தொழிலாளர்கள், லோடு ஆட்டோ ஓட்டுநர்கள் மற்றும் பஸ் முகவர்கள் என 77 நபர்களுக்கும், 35 இசை கலைஞர்களுக்கும் அரிசி மற்றும் மளிகை பொருட்களை வழங்கினார். நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலை வகித்தார். மேலும் கோவில்பட்டி ஆவின் பால் சொசைட்டியில் பணியாற்றும் 30 பணியாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு அரிசி, பருப்பு, மளிகை பொருட்களை வழங்கினார். மேலும் கோவில்பட்டி ஆவின் பால் சொசைட்டியில் பணியாற்றும் 16 பணியாளர்களுக்கு கொரோனா நிவாரண ஊக்கத்தொகையாக தலா ரூ.1000/- விதம் ரூ.16000 ரொக்கப்பணமாக வழங்கினார்.

அதனைத்தொடர்ந்து மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் செ.ராஜூ அவர்களிடம் ராவிள்ள KR அப்பாசாமி நாயுடு வித்யாசரம் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மற்றும் சி.பி.எஸ்.இ. பள்ளி நிர்வாகத்தின் சார்பாக கொரோனா தடுப்பு பணிகளுக்கு ரூ.1 லட்சத்துக்கான காசோலையினை தலைவர் திரு.செல்வராஜ் அவர்கள் வழங்கினார்.

பின்னர் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் செ.ராஜூ அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தாவது:

கோவைட் 19 என்கின்ற கொரோனா வைரஸ் தொற்று நோயின் காரணமாக இரண்டாம் உலக போரில் ஏற்பட்ட பாதிப்புகளை விட தற்போது இந்த தொற்று நோயினால் சுகாதார பேரிடர் என்று சொல்கின்ற வகையில் மனித இனத்தினை பாதித்து வருகிறது. உலக சுகாதார மையம் இந்த நோயினை பரவாமல் இருக்க பொதுமக்கள் தனித்திருக்க வேண்டும் என தெரிவித்துள்ளது. இதனை கருத்தில்கொண்டு பேருந்துகள், விமானம், புகைவண்டி உள்ளிட்ட அனைத்து பேருந்துகளும் நிறுத்தி வைக்கப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்று கொண்டு இருந்து சட்டமன்ற கூட்டத்தொடரினை ஒத்திவைக்கப்பட்டு அரசு மருத்தவமனைகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள கொரோனா தொற்று வார்டினை பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும் தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள பல்வேறு முன்னெச்சரிக்கையால் கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவுவதை கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது. இந்தியாவிலே தமிழகத்தில்தான் கொரோனா தொற்று நோயினால் பாதிக்கப்பட்டு குணம் அடைந்த சதவீதம் கடந்த வாரம் 40 சதவீதமாக இருந்தது. தற்போது 52.79 சதவீதமாக உயர்ந்துள்ளது.

தூத்துக்குடி மாவட்டத்தில் தமிழக அரசின் வழிகாட்டுதல்படி மேற்கொள்ளப்பட்டுள்ள பல்வேறு முன்னெச்சரிக்கை மற்றும் கொரோனா தடுப்பு நடவடிக்கையால் கொரோனா சமூக பரவலாக மாறவில்லை. மேலும் கொரோனா நோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்ற குணம் அடைந்த 25 நபர்கள் ஏற்கனவே வீடு திரும்பி உள்ளார்கள். இன்று கடைசியாக

சிகிச்சை பெற்று வந்த பெண்மணியும் பூரணம் நலம் பெற்று வீடு திரும்பி உள்ளார்கள். மாவட்ட நிர்வாகம் மேற்கொண்ட பல்வேறு தீவிர நடவடிக்கைகளால் கடந்த 12 நாட்களாக நமது மாவட்டத்தில் கொரோனா தொற்று நோய் பாதித்த நபர்கள் இல்லை என்ற நிலையை எட்டியுள்ளது. அரசு மற்றும் மாவட்ட நிர்வாகம் வெளியிடும் செய்திகளை பொதுமக்களுக்கு எடுத்து சென்று விழிப்புணர்வு ஏற்படுத்தும் பத்திரிகையாளர்கள் மற்றும் ஊடகத்தினருக்கும் பொதுமக்கள் சார்பில் நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன். அரசு எடுக்கும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு அளித்து சமூக இடைவெளியை கடைபிடித்து கொரோனா வைரஸ் தொற்று நோய் தொடர்ந்து இல்லை என்ற நிலையை உருவாக்க முழ ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் செ.ராஜூ அவர்கள் கோவில்பட்டி ஆதிபராசக்தி மன்றத்தின் ஏற்பாட்ன் மூலம் 100 குடும்பங்களுக்கு அரிசி, பருப்பு, மளிகைபொருட்கள், காய்கறிகள் அடங்கிய பைகளை வழங்கினார். மேலும் இலுப்பையுரணி பகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இலுப்பையுரணி கவுன்சிலர் திருமதி.பூங்கோதை அவர்கள் ஏற்பாட்டில் 600 ஏழை, எளிய மற்றும் மாற்றுத்திறனாளி குடும்பங்களுக்கு அரிசி, பருப்பு, மளிகைபொருட்களை வழங்கினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் திரு.மோகன், கோவில்பட்டி வருவாய் கோட்டாட்சியர் திருமதி.விஜயா, ஒன்றியக்குழு தலைவர் திருமதி.கஸ்தூரி சுப்புராஜ், கோவில்பட்டி நகராட்சி ஆணையர் திரு.ராஜாராம், மாவட்ட காவல் துணை கண்காணிப்பாளர் (கோவில்பட்டி) திரு.ஜெபராஜ், கோவில்பட்டி ஆவின் பால் சொசைட்டி தலைவர் திரு.ராமச்சந்திரன், துணை பதிவாளர் திரு.நவராஜ், முதல்நிலை ஆய்வாளர் கோவில்பட்டி சரகம் திரு.மனோகர், இலுப்பையுரணி ஊராட்சி தலைவர் திருமதி.செல்வி சந்தானம், கவுன்சிலர் திருமதி.பூங்கோதை, கோவில்பட்டி வட்டாட்சியர் திரு.மணிகண்டன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.மாணிக்கவாசகம், திருமதி.வசந்தா, மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் திரு.ராமச்சந்திரன், முக்கிய பிரமுகர்கள் திரு.அய்யாத்துரைபாண்டியன், திரு.விஜயபாண்டியன், திரு.சுப்புராஜ், ஆதிபராசக்தி மன்றத்தின் தலைவர் திரு.சக்தி அப்பாசாமி மற்றும் அலுவலர்கள், முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி